# நபி வழியில்
# நம் நோன்புப் பெருநாள்

தொகுப்பு : RazeenAkbar (மதனி)
அழைப்பாளர் : தபூக் அழைப்பு நிலையம்,
சவுதி அரேபியா.
(20/06/2017)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகி அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். மேலும், அவனின் இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அன்னாரின் குடும்பத்தினர், அன்னாரை பின்பற்றி நடந்த - நடக்க இருக்கின்ற அனைவரின் மீதும் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக.

ரமழான் மாதத்தில் அல்லாஹ்வால் விதிக்கப்பட்ட கடமையான நோன்பை நோற்றவர்களான நாம், அதன் பெருநாளையும் ஆவலுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடும் எம்சமூகத்திற்கு நோன்புப் பெருநாள் சம்பந்தமான சில விடயங்களை நினைவுபடுத்துவது சாலச்சிறந்தது என நினைக்கின்றேன்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா வருகை தந்த சமயத்தில் மதீனாவாசிகளுக்கு இரு நாட்கள் இருந்தன அவைகளில் அவர்கள் விளையாடக்கூடியவர்களாக இருந்தார்கள். இதைப் பார்த்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவைகள் இரண்டும் என்ன நாட்கள்? என வினவினார்கள். அதற்கு அவர்கள் : நாங்கள் ஜாஹிலிய்யா காலத்தில் இருந்த போது விளையாடுபவர்களாக இருந்தோம் என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள் அல்லாஹ் உங்களுக்கு இவைகளை விட சிறப்பான இரு தினங்களாக **நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாளை** ஆக்கியுள்ளான் என்று கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

இப்படியாக இறைவனால் விதிக்கப்பட்ட பெருநாட்களில் ஒன்றான **நோன்புப் பெருநாளை** வரவேற்கும், கொண்டாடும் எம்சமூகத்திற்கு நபிவழியில் நம் பெருநாளை எப்படி அமைத்துக்கொள்வதென சில விடயங்களை பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். இன்ஷா அல்லாஹ்…

## பிறை பார்த்தல் :

பொதுவாக இஸ்லாமிய மாதத்தைப் பொருத்தவரையில் ஒரு மாதத்தில் 29 அல்லது 30 நாட்களாகும். எனவே, நாம் ஷவ்வாலுக்கான முதல் பிறையை ரமழானின் 29ஆவது நோன்பை திறந்தவுடன் பார்க்க வேண்டும். அப்பொழுது ஷவ்வால் மாதத்திற்கான முதல் பிறை தென்படாவிட்டால் ரமழான் மாதத்தை 30ஆக பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

عبد الله بن عمر رضي الله عنهما أن رسول الله صلى الله عليه وسلم قال : الشهر تسع وعشرون ليلة فلا تصوموا حتى تروه، فإن غم عليكم فأكملوا العدة ثلاثين. (رواه البخاري -١٠٩٧)

“ஒரு மாதம் என்பது 29 இரவுகளாகும். எனவே, பிறையைக் காணாமல் நீங்கள் நோன்பு நோற்காதீர்கள். உங்களுக்கு மேக மூட்டம் தென்படுமானால் 30 நாட்களாக எண்ணிக்கையை முழுமைப்படுத்துங்கள்” (புஹாரி : 1097)

## பிறையைப் பார்த்தால் கூற வேண்டியது :

தல்ஹா பின் உபைதுல்லாஹ (றழி) அவர்கள் கூறினார்கள். நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறையைக் கண்டால் ;

"اللَّهُمَّ أَهْلِلْهُ عَلَيْنَا بِالأَمْنِ وَالْإِيمَانِ وَالسَّلَامَةِ وَالْإِسْلَامِ رَبِّي وَرَبُّكَ اللَّهُ"

“அல்லாஹுும்ம அஹில்லாஹுு அலைனா பில்அம்னி வல் ஈமான், வஸ்ஸலாமதி வல் இஸ்லாம், ரப்பீ வரப்பு கல்லாஹ்” என்று கூறுவார்கள். (ஆதாரம்: திர்மிதி, தாரமீ, அஹ்மத்)

**குறிப்பு** : (முதல்) பிறையைப் பார்த்ததும் ஓத வேண்டியதாக கூறப்படும் இந்த துஆ பலவீனமான செய்தியாகும். ஏனென்றால், இந்த அறிவிப்பாளர் தொடரில் சுலைமான் இப்னு சுப்யான் என்பவர் இடம் பெறுகின்றார். இவர் பலவீனமானவராவார்.

## தக்பீர் ஆரம்பிக்கும் மற்றும் முடிவுரும் நேரம் :

தக்பீர் ஷவ்வால் மாத முதல் பிறை தென்பட்டதிலிருந்து பெருநாள் தொழுகைக்காக இமாம் (பெருநாள் தொழுகையை தொழுவிப்பவர்) தொழும் திடலுக்கு வருகின்றவரை அனைவரும் கூற வேண்டும்.

ஆண்கள் தங்கள் சப்தங்களை உயர்த்தியவர்களாகவும், பெண்கள் சப்தமின்றியும் ஒவ்வொருவரும் தனித்தனியாக கூறவேண்டும்.

ஒருவர் கூறிக்கொடுக்க மற்றவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், ஐவேளைத் தொழுகைகளுக்கு பிறகு மாத்திரம் கூறுவதும், குறிப்பாக நோன்புப் பெருநாள் தினத்தைப் பொருத்தமட்டில் அன்று மாலை அஸர் தொழுகை தொழும்வரை தக்பீர் கூறுகின்ற நிலைப்பாடு எம்சமூகத்தில் பரவலாக காணப்படுகின்றது. இவைகள் அனைத்தும் நபிவழிக்கு மாற்றமானதாகும். எனவே, நாம் இவைகளிலிருந்து முற்றுமுழுதாக தவிர்ந்து கொள்ளவேண்டும்.

ஏனென்றால், நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். “நாம் கட்டளையிடாத ஒரு விடயத்தை யாரேனும் செய்தால் அது நிராகரிக்கப்படும்.” (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

## தக்பீர் சொல்லும் முறை :

அல்லாஹுுத்தஆலா தன் திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்.

وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ [البقرة : ١٨٥]

மேலும் (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ்வை- உங்களுக்கு அவன் நேர்வழி

காட்டியதற்காக நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதறகாகவுமே. (அல்பகரா:158)

இந்த அடிப்படையில் நம் பெருநாள் தினங்களில் அல்லாஹ்வை புகழ்ந்து அவனுக்கு தக்பீர் கூறுகின்றோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த தக்பீரைத்தான் கூறினார்கள் என்று எந்த ஹதீஸ்களும் தெளிவாக வந்ததாக இல்லை என்றாலும் பல ஸஹாபாக்கள் கூறியதாக கூறப்படும் சில தக்பீர்களை மாத்திரம் குறிப்பிடுகின்றேன். அதிலும் குறிப்பாக அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) , அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி), அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறியதாக "முஸன்னப் இப்னு அபீ ஷைபா, சுனன் அத்தாரகுத்னீ, அஸ்ஸுனன் அல்குப்ரா பைஹகீ" போன்ற கிரந்தங்களில் வந்தவைகளை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

ஏனென்றால், இமாம் அஹ்மத், இமாம் இஸ்ஹாக் போன்றோர் தக்பீரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது கீழே குறிப்பிடும் முறைகளுக்கு மேலதிகமாக கூறப்படும் வார்த்தைகள் எவ்வித ஆதாரமுமற்றது என்று குறிப்பிடுகிறார்கள்.

الله أكبر الله أكبر لا إله الا الله الله أكبر، الله أكبر ولله الحمد

الله أكبر الله أكبر الله أكبر لا إله الا الله الله أكبر، الله أكبر ولله الحمد

"அல்லாஹு அக்பர் - அல்லாஹு அக்பர் - லா இலாஹ இல்லல்லாஹு - அல்லாஹு அக்பர் - அல்லாஹு அக்பர் - வலில்லாஹில் ஹம்து" -இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள்.

اللَّهُ أَكْبَرُ كَبِيرًا اللَّهُ أَكْبَرُ كَبِيرًا اللَّهُ أَكْبَرُ وَأَجَلُّ اللَّهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ

"அல்லாஹு அக்பர் கபீரா, அல்லாஹு அக்பர் கபீரா அல்லாஹு அக்பர் வஅஜல்லு அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து" -இப்னு அப்பாஸ், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்-

## பெருநாள் இரவன்று செய்யக்கூடிய அமல்கள் :

عَنْ أَبِي أُمَامَةَ رضي الله عنه عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : (مَنْ قَامَ لَيْلَتَيْ الْعِيدَيْنِ مُحْتَسِبًا لِلَّهِ لَمْ يَمُتْ قَلْبُهُ يَوْمَ تَمُوتُ الْقُلُوبُ) .

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : யார் இரு (நோன்பு, ஹஜ்) பெருநாள் இரவுகளில் அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தவன்னம் நின்று வணங்குகின்றானோ.. உள்ளங்கள் மரணிக்கின்ற நாளையில் அவனது உள்ளம் மரணிக்காது." (ஆதாரம் : இப்னு மாஜா)

**குறிப்பு :** இந்த ஹதீஸ் பலவீனமானது. அதுமாத்திரமின்றி பெருநாள் இரவுகளை உயிர்ப்பித்தல் சம்பந்தமாக வருகின்ற அனைத்து செய்திகளும் பலவீனமானவைகளே. எனவே, பெருநாள் தின இரவுகளுக்கு என்று எந்த சிறப்பான செயற்பாடுகளோ, அமல்களோ கிடையாது.

## பெருநாள் காலையன்று செய்யக்கூடிய செயல்கள் :

1- **குளித்தல் :**

عن ابن عباس–رضي الله عنهما–: «كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وآله وسلم يَغْتَسِلُ يَوْمَ الْفِطْرِ وَيَوْمَ الأَضْحَى» أخرجه ابن ماجه والبيهقي

இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் தினங்களில் குளிக்கின்றவர்களாக இருந்தார்கள். (ஆதாரம்: இப்னுமாஜா, பைஹகீ)

**குறிப்பு :** இந்த ஹதீஸில் வரக்கூடிய ஹஜ்ஜாஜ் பின் தமீம் பலவீனமானவர், அத்துடன் ஜுபாரா பின் அல்முஅல்லிஸ் என்பவர் இட்டுக்கட்டப்படுபதைக்கொண்டும் குறைகூறப்பட்டவர். எனவே, இந்த ஹதீஸ் பலவீனமானதாகும.

என்றாலும், பெருநாள் தினமென்பது அனைவரும் ஒரு இடத்தில் ஒன்று கூடும் இடமாக உள்ளது என்பதால் சுத்தமாக இருப்பது சிறந்தது.

2- **புத்தாடை அணிதல் :**

الْحَسَنِ بن عَلِيٍّ–رَضِيَ اللَّهُ تَعَالَى عَنْهُما– قَالَ: «أَمَرَنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وآله وسلم أَنْ نَلْبَسَ أَجْوَدَ مَا نَجِدُ، وَأَنْ نَتَطَيَّبَ بِأَجْوَدِ مَا نَجِدُ» أخرجه الطبراني في المعجم الكبير ، والحاكم.

அலி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் மிகச்சிறந்ததாக கருதக்கூடிய ஆடையை அணிவதற்கும், மிகச்சிறந்த நருமணத்தை பூசுவதற்கும் எங்களை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏவினார்கள். (ஆதாரம் : தபரானீ, ஹாகிம்)

**குறிப்பு :** இதில் வரக்கூடிய இஸ்ஹாக் பின் பர்ஸஜ் அத்தூஸி என்பவர் பலவீனமானர். எனவே, இந்த ஹதீஸ் பலவீனமானது.

என்றாலும் சந்தோஷத்தை வெளிக்காட்டும் விதத்தில் புத்தாடையோ அல்லது தன்னிடம் இருப்பதில் மிகவும் நல்ல ஆடையை அணிவது விரும்பத்தக்கது.

3- **ஒற்றைப்படையாக சில பேரீத்தம் பழங்களை சாப்பிடுதல் :**

أنسٍ–رضي الله عنه– أنه قال: «كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ لَا يَغْدُو يَوْمَ الْفِطْرِ حَتَّى يَأْكُلَ تَمَرَاتٍ»، وفي رواية: «وَيَأْكُلُهُنَّ وِتْرًا» أخرجه البخاري

அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "சில பேரீத்தம் பழங்களை உண்ணாமல் நோன்புப் பெருநாளில் (தொழுகைக்கு) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புறப்பட மாட்டார்கள்." மற்றுமொரு அறிவிப்பில் : "அவற்றை ஒற்றைப்படை எண்ணிக்கையில் உண்பார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. (ஆதாரம் : புஹாரி)

**4- ஸகாத்துல் பித்ராவை பெருநாள் தொழுகைக்கு முன் நிறைவேற்றுதல் :**

இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நோன்புப் பெருநாள் தர்மத்தை மக்கள் தொழுகைக்காகப் புறப்படுவதற்கு முன்னால் கொடுத்து விடும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள். (ஆதாரம் : புஹாரி-1509)

مَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلاةِ فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ وَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلاةِ فَهِيَ صَدَقَةٌ مِنْ الصَّدَقَاتِ.

(أبوداود ١٣٧١)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் (ஸகாத்துல் பித்ராவை) நிறைவேற்றுகின்றாரோ அது ஒப்புக்கொள்ளப்பட்ட ஸகாதாகும். மேலும், யார் அதனை (பெருநாள்) தொழுகைக்குப் பின் நிறைவேற்றுகின்றாரோ அது ஸதகாக்களில் ஒன்றாகவே கருதப்படும். (ஆதாரம் : அபூதாவூத்-1371)

**5- தொழுகைக்கு ஒரு பாதையால் சென்று இன்னொரு பாதையால் திரும்புதல் :**

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا كَانَ يَوْمُ عِيدٍ خَالَفَ الطَّرِيقَ . ومعنى مخالفة الطريق أنه يذهب من طريق ويعود من طريق آخر. (رواه البخاري :٩٨٦)

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பெருநாள் தினமாக இருந்தால் பாதையை மாற்றுபவர்களாக இருந்தார்கள். பாதையை மாற்றுதல் என்பதன் கருத்து : ஒரு பாதையால் சென்று இன்னொரு பாதையால் திரும்பி வருவார்கள். (ஆதாரம் : புஹாரி-986)

**6- பெருநாள் தொழுகையை திடலில் தொழல் :**

அபூஸஈத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்புப் பெருநாளிலும் ஹஜ்ஜுப் பெருநாளிலும் (பள்ளியில் தொழாமல்) திடலுக்குச் செல்பவர்களாக இருந்தார்கள். (ஆதாரம் : புஹாரி-956)

உம்மு அதிய்யா (றழி) அவர்கள் கூறியதாவது : பெருநாளன்று (பெண்களாகிய) நாங்கள் (தொழும் திடலுக்குப்) புறப்பட்டுச் செல்ல வேண்டுமெனவும், திரைமறைவில் உள்ள பெண்களையும், கன்னிப் பெண்களையும் புறப்படச் செய்ய வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்தோம். மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் (தொழும் திடலுக்குச் சென்று) மக்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு மக்களுடன் சேர்ந்து "தக்பீர்" கூறுவார்கள். (ஆதாரம் : முஸ்லிம்-1614)

**இதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயம் :**

மஸ்ஜிதுந் நபவியில் (நபியவ்களின் பள்ளிவாயலில்) தொழக்கூடிய ஒரு தொழுகை மற்ற பள்ளிவாயல்களில் தொழக்கூடிய 1000 தொழுகைகளை விடச் சிறந்தது. எனக்கூறிய நபி ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஏன் பெருநாள் தொழுகையை பள்ளிவாயலில் தொழுவிக்காமல் திடலில் தொழுவித்தார்கள்???

இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால், பெருநாள் தொழுகைகளை திடலில் தொழுவதைவிட சிறந்த வேறு இடம் கிடையாது என்பதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : யார் இஸ்லாத்தில் ஒரு நல்ல விடயத்திற்காக வழிகாட்டுகிறானோ அவனுக்கு அதனுடைய கூலி கிடைக்கும். மேலும், அவனை பின்தொடர்ந்து செய்தவனுடைய கூலியும் (வழிகாட்டியவனுக்கு) கிடைக்கும். ஆதில் எந்தவித குறையுமில்லாமல்.
அதேபோல் யார் தீமையின் பக்கம் வழிகாட்டுகிறானோ அவனுக்கு அதனுடைய கூலி கிடைக்கும். மேலும், அவனை பின்தொடர்ந்து செய்தவனுடைய கூலியும் (வழிகாட்டியவனுக்கு) கிடைக்கும். அதில் எந்தவித குறையுமில்லாமல். (ஆதாரம்: முஸ்லிம்)

எனவே, நாம் நல்வழியின் பால் வழிகாட்டக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

7- **ஒருவரைப் பார்த்து இன்னொருவர் வாழ்த்து கூறுதல் :**

இது சம்பந்தமாக இப்னு துர்க்மானி என்பவர் தனது “அல்ஜவ்ஹர் அந்நகீ” என்ற புத்தகத்தில் ஒரு ஹதீஸை பதிவு செய்கின்றனர்.

حديث محمد من زياد قال: كنت مع أبي أمامة الباهلي وغيره من أصحاب النبي، فكانوا إذا رجعوا يقول بعضهم لبعض: **تقبل الله منا ومنك**). قال أحمد بن حنبل: إسناده جيد.

முஹம்மத் என்பவரின் ஹதீஸ் ஸியாத் என்பவரின் வாயிலாக : நான் அபீ உமாமா அல்பாஹிலி மற்றும் சில நபித்தோழர்களுடன் இருந்தேன். அவர்கள் (பெருநாள் தொழுகையில் இருந்து) மீண்டும் வந்தால், ஒருவருக்கொருவர் “தகப்பலல்லாஹு மின்னா வமின்க” (பொருள்: அல்லாஹ் என்னையும் உங்களையும் பொருந்திக்கொள்வானா!) என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.
(இதன் அறிவிப்பாளர் தொடர் நல்லது என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.)

قال جبير بن نفير(تابعي) كان أصحاب النبي صلى الله عليه وسلم إذا التقوا يوم العيد يقول بعضهم لبعض : " **تقبل الله منا ومنك**." قال الألباني : إسناده صحيح

ஜுபைர் இப்னு நுபைர் என்ற தாபிஈ கூறுகின்றார் : நபித்தோழர்கள் பெருநாள் தினத்தில் சந்தித்துக் கொண்டால் ஒருவருக்கொருவர்

“தகப்பலல்லாஹுு மின்னா வமின்க” என்று கூறுபவர்களாக இருந்தார்கள். (இதன் அறிவிப்பாள் தொடர் சரியானது என இமாம் அல்பானி அவர்கள் தமாமுல் மின்னா என்ற புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்கள்)

(இஸ்லாமிய) வருடத்தில் ஒருமுறை மாத்திரம் வரக்கூடிய இந்நோன்புப் பெருநாளை நபிவழியில் கொண்டாட எல்லாம் வல்ல அல்லாஹுுத்தஆல நம் அனைவருக்கும் அருள்புரிவானாக!

**யாவும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே!**